


திருவாசகம் - 24
அடைக்கலப்பத்து கதைவடிவில்
கே. வி. குணசேகரம்

வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



உ

சிவமயம்

# அடைக்கலப்பத்து கதை வடிவில்
# பக்குவ நிர்ணயம்
# திருப்பெருந்துறையில் அருளியது

**செழுக்கமலத் திரளநின் சேவடி நேர்ந்தமைந்த**

**பழுத்தமனத் தடியருடன் போயினா யான் பாவியேன்**

**புழுக்கணுடைப் புன்குரம்பைப் பொல்லாக்கல்வி ஞானமிலா**

**அழுக்குமனத் தடியேன் உடையாய் உன் அடைக்கலமே. 01**

கதிரேசனின் மனம் கலவரப்பட்டுக் கொண்டிருந்தது. அவரது மூத்தமகனின் மகன் பல்கலைக்கழகத்தில் கற்கிறான். அவன் வகுப்பில் மயக்கமடைந்ததால் அவனை அவசர சிகிச்சைப்பிரிவில் சேர்த்திருந்தனர். மூத்த பேரன் என்பதால் அவர் அவன்மீது பெரும் பாசம் கொண்டிருந்தார். பற்றுக்கள் எல்லாவற்றையும் துறந்தபோதும், அடிமனதில் சில பற்றுக்கள் ஒட்டிக்கொண்டுதான் இருக்கும். அதை அகற்ற முடியாது. மாணிக்கவாசகரும் அவ்வாறுதான் செல்கிறார்; “மெய்யடியார்கள் அதாவது மலங்கள் நீங்கப்பெற்ற அடியார்கள் உனது திருவடி நிழலை அடைந்துள்ளனர். ஆனால் நான் உணர்வுகளில் ஊறியும், பொருளற்ற கவலைகளில் உழன்றும், மனம் கேடு அடைந்தும் கிடக்கின்றேன். ஆயினும் உன்னிடம் அடைக்கலமடைய விரும்புகின்றேன்” என்று மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்தில் மனம் நொந்து சொல்கிறார்.

அப்போது அங்கே வந்த நல்லைநாதன் அவரது கோலத்தைக்கண்டு அதிர்ந்து போனார். எல்லோருக்கும் ஆலோசனைகள் கூறும் அவர் இடிந்துபோய் அமர்ந்திருந்ததைக் காண அவருக்குத் துக்கம் பீறிட்டது. கண்கள் கலங்கின. “அண்ணை நீ பெரும் சிவபக்தன் கலங்கலாமா…? சிவனிடம் முறையிடு. அவர் காப்பாற்றுவார்” என்றார் நல்லைநாதன்.

கதிரேசன் நிமிர்ந்து நல்லைநாதனைப் பார்த்தார்; “நல்லை, இன்று நான் சிவபூசைகூடச் செய்யவில்லை. மனம் பெரியளவில் கலங்கிவிட்டது. இப்படி ஒருபோதும் நடந்ததில்லை. பற்றில்லாதவர்கள் என்று சொன்னபோதும் அதை நீக்க முடியவில்லை.

அவன் மூத்த பேரன். தூக்கி விளையாடி மகிழ முதலில் வந்தவன். எனக்கு உலகைப் புரியும். நாம் நினைத்தது எது நடக்கிறது. இருப்பினும் அதை நினைத்து ஆறுதல் அடைய முடியவில்லை. உடல் உணர்வுகள் அச்செய்தியைக் கேட்டதும் மரத்துவிட்டன. தேவையில்லாத எண்ணங்கள் பல மனதில் உருவாகித் துன்புறுத்துகின்றன. மனம் துவண்டு விட்டது. இருந்தபோதும் காலையில் இருந்து "சிவனே, நீ தான் நல்லவற்றைச் செய்ய வேண்டும் என்று அவனிடம்அடைக்கலமாகி விட்டேன்" என்றார். அவரது குரல் தளதளத்தது.

**வெறுப்பனவே செய்யும் என் சிறுமையைநின் பெருமையினாற்**

**பொறுப்பவனே அராப் பூண்பவனேபொங்க கங்கைசடைக்**

**செறுப்பவனே நின்திருவருளால் பிறவியைவேர்**

**அறுப்பவனே உடையாய்அடியேன்உன் அடைக்கலமே. 02**

"அண்ணை, கவலைப்படாதேங்கோ, சிவனைச் சார்ந்தவர்களுக்குத் துன்பம் வராது. பெருமைதான் வரும் என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். கொடிய நச்சுப்பாம்பான நாகத்தை ஏன் மக்கள் மதிக்கிறார்கள், வணங்குகிறார்கள். அது சிவனின் ஆபரணமாகக் கழுத்தில் இருப்பதால், சிவனைப் போலவே அதையும் மதிக்கின்றனர். விசமில்லாத பாம்பைக்கூடக் கண்டால் அடித்துவிடுவார்கள். கங்கைநதி பெருகி ஊரையெல்லாம் அழிக்கும் இயல்புடையது. அது சிவனின் முடியில் இருப்பதால் அது அடங்கி ஒடுங்கி இருக்கிறது. அத்துடன் மதிக்கப்படுகிறது" என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். நீங்கள் சிவனைச் சார்ந்தவர். சிவனே கதியென்று இருப்பவர். சிவசேவை செய்பவர். அதனால் உங்களுக்குத் துன்பங்கள் வராது. மாணிக்கவாசக சுவாமிகள், குணக்கேடனாகிய என்னைக் குணவானாக்கு. உன்னிடம் அடைக்கலம் புகுந்துள்ளேன். எனது பிறவியை அறு" என்கிறார். நீங்கள் சிவனிடம் ஏற்கனவே அடைக்கலமாகி விட்டீர்கள். உங்களது பேரனைக் காப்பாற்றும்படி கேளுங்கள்" என்றார் நல்லைநாதன்.

**பெரும்பெருமான் பிறவியை ரேறுத்துப் பெரும்பிச்சுத்**

**தரும்பெருமான் சதுரப்பெருமான் என் மனத்தினுள்ளே**

**வரும்பெருமான் மலரோன் நெடுமாலறியாமல் நின்ற அரும்**

**பெருமான் உடையாய்அடியேன்உன் அடைக்கலமே. 03**

“மாணிக்கவாசகர் கூறுவதை நான் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை. ஏனென்றால் அவற்றையெல்லாம் எனக்குச் சொல்லித் தந்தது நீங்கள். ஆனால் இப்போ சொல்ல வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. உங்களது மனம் மிகவும் குழம்பிவிட்டது. அதனால் சொல்கிறேன். “நீ பிறவியைப் போக்குபவன். பக்திப்பித்தைப் பெருக்குபவன். எதையும் சாதிப்பவன். மனதில் குடிகொண்டவன். ஜீவபோதம் படைத்த அயனுக்கும் அரிக்கும் எட்டாதவன். அடியார்களை உடையவன். அதனால் உன்னை மகாதேவன் என்கின்றனர். அதனால் உன்னிடம் அடைக்கலம் புகுகிறேன்” என்கிறார். இவையெல்லாவற்றையும் அறிந்த நீங்கள் கவலை கொள்ளலாமா…? ஏற்கனவே நீங்கள் சிவனிடம் அடைக்கலம் புகுந்துவிட்டீர்கள். அவன் எதையும் சாதிப்பவன் என்பதால்தான் யமனைக் காலால் உதைத்தவன். சிரித்தே முக்கோட்டைகளையும் எரித்தவன். உயிரின்மீது ஆசைகொண்ட அரிக்கும் அயனுக்கும் எட்டாதவன். அதனால் உங்களது பேரனின் உயிர்மீது ஆசை கொள்ளாது அவனது உயிரைச் சிவனிடம் ஒப்படைத்துவிட்டு மகிழ்வுடன் இருங்கள்” என்றான் நல்லைநாதன்.

அப்போது அங்கு வந்த மகாலிங்கம் சொன்னான்; “அண்ணை, நீங்கள் துயரப்பட்டு அழுவதாக ஊரவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இது சரியா…? சிவனின் மீது பெரும் அன்பு கொண்டு சிவனின் அடிமை என்று சொல்லும் நீங்களா துயரப்படுகிறீர்கள். அப்போ சாதாரண மக்கள் துயரப்படும்போது ஏன் ஆறுதல் கூறுகிறீர்கள் என்றும் ஊரவர் கதைக்கின்றனர்” என்றான் மகாலிங்கம்.

**பொழிகின்ற துன்பப் புயல்வெள்ளத்தில்நின் கழற்புணை கொண்டு**
**இழிகின்ற அன்பர்கள் ஏறினார் வான்யான் இடாக்கடல்வாய்ச்**
**சுழிசென்று மாதாத் திரைபொரக் காமச் சுறவெறிய அழிகின்றனன்**
**உடையாய்அடியேன்உன் அடைக்கலமே. 04**

அப்போது அங்கே மாதுமை வந்தாள். “ஐயா சின்னப் பிரச்சினைக்குப் பெரும் கவலைப்பட்டுவிட்டீர்கள். நான் வைத்தியசாலையுடன் தொடர்புகொண்டு கேட்டேன். அவனுக்கு உணவு ஒத்துக்கொள்ளவில்லை. உணவு ஒத்துக்கொள்ளாவிட்டாலும் வாந்தி, மயக்கம் என்பன வரும். சிவபக்தனான நீங்கள் கவலைப்படலாமா…? மாணிக்கவாசக சுவாமிகளைப் பற்றி எமக்குச் சொல்லும் நீங்கள் அவரது வாக்கியத்தை ஏன் நினைக்கவில்லை. அவர், “துன்பக்கடல் என்னும்

மண்ணுலகத்திற்கு வந்த பக்தர்கள் திருவடி என்ற தெப்பத்தைக்கொண்டு முத்தி என்ற கரையை அடைவர். அத்துடன் அத்தெப்பத்தின் துணைநாடியவர்கள் யமனுக்குப் பயப்படமாட்டார்கள். பெரும் பெரும் நோயாளர்களுக்குச் சிவனின் அருளைப்பற்றிக் கூறுகிறீர்கள். நீங்கள் தன்நிலையை இழக்கக் காரணம் என்ன? மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகிறார்; "ஆசைகளால் அழிகின்ற என்னை நான் உன்னிடம் ஒப்படைத்து விட்டேன். இனிக் கவலைப்படமாட்டேன். ஏனென்றால் நீ என்னைக் கரைசேர்ப்பாய் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது" என்கிறார். அதுபோல சிவனே கதியென்று வாழும் நீங்கள் கலங்கலாமா" என்று கேட்டாள் மாதுமை.

கதிரேசன் சிரித்துவிட்டுச் சொன்னார்; "மகளே, இரத்தம் ஒரு கணம் துடித்து எல்லாவற்றையும் செயலிழக்கச் செய்துவிட்டது. சிவன்கூடச் சில இடங்களில் உணர்ச்சி வசப்பட்டுள்ளார். அது நன்மையாக முடியும். எனது துன்பமும் அவ்வாறானதுதான். எவ்வளவு நம்பிக்கையுடன் சிவனை வணங்கினாலும், அவன் எல்லாம் செய்வான் என்று நம்பினாலும், ஒரு கணம் வரும் பற்று முன்னுள்ள எல்லாவற்றையும் அழித்துவிடும் என்பார்கள். அதை நான் மறுப்பதுண்டு. அதனால் சிவன் என்னைச் சோதிக்கிறார். எனது தந்தையிடம் நான் தோற்றுப்போய் விட்டேன்" என்றார் கதிரேசன்.

"தந்தையுடனும் போட்டியா…?" என்று கேட்டுச் சிரித்தார் மகாலிங்கம்.

**சுருள்புரி கூழையர் சூழலிற் பட்டுன் திறம்மறந்திங்கு**

**இருள்புரி யாக்கையிலேகிடந் தெய்த்தனன் மைத்திடங்கண்**

**வெருள்புரிமான்அன்ன நோக்கிதன் பங்கவிண்ணோர் பெருமான்**

**அருள்புரியாய் உடையாய் அடியேன் உன் அடைக்கலமே. 05**

"என்னதான் நம்பிக்கை இருந்தாலும் நாம் மனிதர்கள் தானே. தேவர்களான அயனும் அரியுமே தெரிந்தும் தவறு விட்டவர்கள். அவர்களை விட மேலானவர்கள் தான் மனிதர்கள் என்றாலும், சில சமயம் எல்லாவற்றையும் மறந்து விடுகிறோம். மாணிக்கவாசக சுவாமிகள், "நான் காமநோயால் வருந்துபவன். உனது அருள்த்திறனை மறந்து அஞ்ஞானத்தில் உதித்த உடலில் உழன்று இளைத்தவன். அம்பிகை சமேதா, அத்தகைய என்னை ஆட்கொள், உன்னைத் தஞ்சமடைந்தேன்" என்கிறார். உண்மையில் அவர் காமநோயால் அவதிப்படவில்லை. அப்படி இருக்க ஏன் அப்படிச் சொன்னவர்" என்று கேட்டார் மகாலிங்கம்.

“மகாலிங்கம், பெரியவர்கள், ஞானிகள் உலக நன்மைக்காகத் தம்மை இகழ்வது வழக்கம். பிறரைக் குறித்துச் சொன்னால் பிறர் மீது குற்றம் சுமத்துவதும் பாவம். அதனால்த்தான் எந்தப் பழிபாவத்தையும் அறியாத மாணிக்கவாசக சுவாமிகள் தன்னை உதாரணமாகக் கொண்டு சிவனின் பெருமையைக் கூறுகிறார்” என்றார் கதிரேசன்.

“என்ன பாவத்தைச் செய்தாலும் அது பாவம் என்றுணர்ந்து அதை மன்னிக்குமாறு கோரினால் அப் பாவத்தைச் சிவன் நீக்குவார் என்று நம்பிக்கை மாணிக்கவாசக சுவாமிகளின் பாடல்களில் குறிக்கப்பட்டுள்ளது” என்றாள் மாதுமை.

“வைத்தியரானாலும் சமயத்தில் நிபுணியாகிவிட்டாய்” என்றார் கதிரேசன்.

**மாழைமைப் பாவிய கண்ணியர் வன்மத் திடவுடைந்து**

**தாழியைப் பாவு தயிர்போல் தளர்ந்தேன் தடமலர்த்தாள்**

**வாழியெப் போதுவந்தெந்நாள் வணங்குவன் வலவினையேன்**

**ஆழியப் பாவுடை யாய் அடியேன் உன் அடைக்கலமே 06**

சுந்தரமூர்த்தி சுவாமிகள் வெள்ளிக்கிழமைகளில் ஆச்சிரமத்திற்கு வரும் அடியவர்களுக்கு உரையாற்றுவார். அன்று வெள்ளிக்கிழமை ஏராளமான அடியார்கள் வந்திருந்தனர்.

“சிவனடியார்களே, எப்படியான தீமைகளைச் செய்தாலும் சிவனை மனமுருகி வணங்கினால் அவன் நமக்கு இனியவனாகி விடுவான். இது எமது கிராமத்தைப் பார்த்தாலே தெரியும். யாருக்கும் அடங்க மறுத்துக் கோவில்களில் சிவ நிந்தனை செய்வதோடு கலகமும் செய்த மகாலிங்கத்தையும் பாருங்கள். அவன் செய்யாத பாவங்களே இல்லை. இன்று பெரும் சிவனடியான். இதைப் பற்றி மாணிக்கவாசக சுவாமிகள் இவ்வாறு சொல்கிறார்; ‘‘பெண்கள் மத்தால் தயிரைக் கடையும்போது தயிரானது சிதறுண்டு கடையும் பாத்திரத்தில் மோதிச் சுழல்வது போல நான் தளர்ச்சியடைந்தேன். வலிமையான வினையின் பிடியில் இருக்கும் நான் உனது திருவடியை எப்படி வணங்குவது? கருணைக் கடலான அப்பனே அடைக்கலம் தந்தருளுக’’ என்று கெஞ்சுகிறார். இதிலிருந்து என்ன தெரிகிறது. நீங்கள் எப்படியான பாவம் செய்தாலும் அதை மன்னிக்குமாறு பயமின்றிச் சிவனைக் கேட்கலாம். மத்தால்

கடையப்படும் தயிரானது சிதறி உருத்தெரியாது இருக்கும். அப்படி இருக்கும் நான் எப்படி உன்னைத் தொடுவேன் என்கிறார். முன்பு பல பாவங்களை அஞ்சாது செய்த மகாலிங்கம் பாடம் படித்துத் திருந்திய பின்பு அஞ்சாமல் கோவிலுக்கு வந்தான். அதுபோல வெட்கப்படாமல் தமிழ்நாட்டிலுள்ள சிவத்தலங்களுக்கெல்லாம் சென்று வந்தான். அப்படித்தான் வாழவேண்டும். நாம் மாமிசம் உண்பவன். கோவிலுக்குச் செல்லக்கூடாது. குடிப்பவன் கோயிலுக்குப் போகக்கூடாது என்று நினைக்காதீர்கள். சிவனிடம் அடைக்கலமாகிவிட்டால் அவன் யாரையும், அவர்கள் செய்த குற்றங்களையும், சாதியையும் கவனிக்காது அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்துக் காப்பான். இதை நம்புங்கள்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**மின் கணினார்நுடங்கும் இடையார் வெகுளிவலையில்**

**அகப்பட்டுப் புன்கணனாய்ப்புரள் வேனைப் புரளாமற் புகுந்தருளி**

**என்கணிலே அமுதூறித்தித் தித்தென் பிழைக் கிரங்கும்**

**அங்கணனே உடையாய் அடியேன் உன் அடைக்கலமே 07**

சுவாமியார் பேசி முடித்ததும் அவர் ஆச்சிரமத்திலுள்ள சிவன்கோவிலுக்குச் சென்று கோவில் மண்டபத்தில் அமர்ந்திருப்பார். அடியார்கள் தமக்குரிய குறைநிறைகளை அந்தநேரம் கூறுவர். அன்று அயல் ஊரில் இருந்து வந்த ஒருவர் சுவாமியாரை வணங்கிவிட்டு அவரைப் பார்த்துக் கொண்டிருந்தார். சுவாமியார் மெதுவாகச் சிரித்தார். அந்தச் சிரிப்பு அவரைக் கவர்ந்தது.

"சுவாமி, நான் அயலூரவன். எமது ஊரவர் பலர் இந்த ஆச்சிரமத்திற்கு வருவார்கள். அவர்கள் உங்களைப்பற்றிச் சொன்னமையால்தான் வந்தேன். வந்தபின் உங்களது பிரசங்கத்தைக் கேட்டேன். அதன்பின் உங்களோடு கதைத்து நான் செய்த பாவங்களைத் தீர்க்க விளைகின்றேன். நான் பெண்களோடு சல்லாபிப்பதுதான் பேரின்பம் என்று நினைத்து வாழ்ந்து வந்தேன். நான் ஒரு பெரும் வர்த்தகன். கையில் எப்போதும் இலட்சக்கணக்கில் பணம் இருக்கும். அதனால் ஒழுக்கமில்லாத பெண்கள் பலர் எனது உறவை விரும்பினர். அவர்கள் எனது பணத்தை விரும்பி என்னுடன் சல்லாபித்தனர். அதுதான் இன்பம் என்று நினைத்து வாழ்ந்தமையால் எனது தாய், தந்தையரும் எனது மனைவி பிள்ளைகளும் என்னை விட்டுச் சென்றுவிட்டனர். நாம் சம்பாதித்த பணம் எல்லாம் செலவாகிப்போக என்னோடு சல்லாபித்த பெண்களும் சென்றுவிட்டனர். இப்போ பெரும் துன்பத்துடன் வாழ்ந்து வருகிறேன். நிம்மதி இல்லை. வாழ்க்கை வெறுத்துவிட்டது. சிலசமயம் தற்கொலை செய்யவும் மனம் விரும்புகிறது. உங்களது

பேச்சைக் கேட்டபின்பு நான் திருந்தி வாழமுடியுமென்று நினைக்கிறேன். எனக்கு உதவி செய்யுங்கள்” என்று அழுதான் அயலூரவனான அருணாசலம்.

“அருணாசலம், தீயசெயல்களைச் செய்யச் செய்ய அச் செயல்கள் இன்பம் அளிப்பதுபோலப் பெரும் துன்பத்தையே தரும். மாணிக்கவாசக சுவாமிகள், சிவனே, மாதர்களின் இணக்கத்தில் இன்பம் இருக்கிறது என்று மயங்கித் துன்பத்தை வரவழைத்துக் கொண்ட என்னைக் காத்தருள். நான் செய்த குற்றத்தை மன்னித்து நான் விரும்பும் இன்பத்தை எனக்குத்தந்து என்னை ஆழ்பவனே, உன்னிடம் நான் அடைக்கலமாகின்றேன். என்னைக் காத்தருள்” என்கிறார். அவர் பெண்களின் இணக்கத்தை விரும்பவில்லை. உன்போன்ற பெண்களின் இணக்கம்தான் பேரின்பம் என்று அதில் மூழ்கிக் களைத்துத் துன்பத்துடன் வருபவர்களைக் காத்து அருளவேண்டும் என்பதற்காக அப்படிச் சொல்லியுள்ளார். அதனால் நீ உன்னை முழுமையாகச் சிவனிடம் ஒப்படை. ஆச்சிரமத்தில் சில நாட்களுக்குத் தங்கு. இங்குள்ள பெரியவர்கள் உன்னைத் நெறிப்படுத்துவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

“அப்படியே செய்கிறேன் சுவாமி” என்றான் அருணாசலம்.

**மாவடு வகிரன்ன கண்ணியங் காநின் மலரடிக்கே**

**கூவிடு வாய்கும்பிக் கேயிடுவாய் நின் குறிப்பறியேன்**

**பாவிடையாடு குழல்போற் கரந்து பரந்த உள்ளம்**

**ஆகெடுவேன் உடையாய் அடியேன் உன் அடைக்கலமே 08**

அருணாசலம் ஆச்சிரமத்திற்கு வந்து ஒரு மாதம் கழிந்துவிட்டது. கதிரேசனும் நல்லைநாதனும் அவனுக்குச் சிவனைப்பற்றி உபதேசித்துக் கொண்டிருந்தனர். அன்று அவன் சுவாமியாருக்குச் சொன்னான்; “சுவாமி, தறிகெட்டு அலைந்த மனம் அமைதி அடைந்துவிட்டது. பிற நினைவுகள் யாவும் அற்று மனதில் சிவநினைவுதான் நிலைகொண்டுள்ளது. பட்டதுன்பங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. இனத்தவர்களும், நண்பர்களும், விபச்சாரிகளும் என்னைப் பணம் காய்க்கும் மரமாகவே எண்ணினர். பணம் அற்றுப் போனதும் அவர்களும் சென்று விட்டனர். இங்குள்ள சிவனடியார்களுக்கும் எனக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. அவர்கள் அறிமுகமானவர்களும் அல்ல. ஆனால் என்மீது பாசத்தைச் சொரிகின்றனர். கதிரேசு அண்ணையும், நல்லைநாதனும் சிவனின் தத்துவங்களைச் சொல்வார்கள். ஆனால்

மகாலிங்கம் தனது சொந்த அனுபவங்களைச் சொல்லி அதைச் சிவனோடு தொடர்புபடுத்திச் சொல்வார். அதனால் எனது மனம் அமைதியடைந்துவிட்டது. கீழான செயல்களைச் செய்தாலும், அதைச் சொல்லிச் சிவனைச் சரணடைந்தால் இன்பம் தானாக வரும் என்று புரிந்து கொண்டேன். மகாலிங்கம் எதற்கும் மாணிக்கவாசக சுவாமிகளை உதாரணங்காட்டித் தத்துவங்களை விளக்குவான். இன்று மாணிக்கவாசக சுவாமிகள் சொன்னதாகச் சொன்னான்; "அம்பிகை பாகனே, என்னை நீ ஆட்கொண்டால் சிவானந்தப்பேறு பெறுவேன். புறக்கணித்தால் அது எனக்கு நரக வேதனையைத் தரும். எனது மனம் நெசவு நாடா போன்று சலனப்படுகிறது. தயவுசெய்து என்னை உன் உடமையாக்கு" என்று மாணிக்கவாசக சுவாமிகள் கெஞ்சியதுபோல நானும் கெஞ்சுகிறேன். நீயும் கெஞ்சு" என்றான். அது எனக்கு மிகவும் பிடித்துவிட்டது" என்றான் அருணாசலம்.

**பிறிவறியார் அன்பாநின் அருட்பெய்கழல் தாளிணைக்கீழ்**

**மறிவறியாச் செல்வம்வந்துபெற்றார் உன்னை வந்திப்பதோர்**

**நெறியறி யேன் நின்னையே அறியேன் நின்னையே அறியும்**

**அறிவறின் உடையாய் அடியேன் உன் அடைக்கலமே 09**

"அருணாசலம், உள்ளன்போடும், உறுதியுடனும் இறைவனை வணங்குவோர்தான் இறைவனது அருளுக்குப் பாத்திரமாவர். அதனால் அவர்களது இறைநம்பிக்கைகள் வளரும். பின் அவரவரது புத்தியால் சிவனை அடைந்துகொள்ள முடியும். அழியாத செல்வமான சிவனை அவனின் அன்பர்கள் தான் அறிந்து கொள்வர்; மாணிக்கவாசக சுவாமிகள், "உன்னை உன் அன்பர்கள் வந்தடைவர். அழியாத செல்வமான நீ அவர்களை அன்புடன் ஏற்றுக் கொள்வாய். ஆனால் நான் உன்னை வணங்கவில்லை. வணங்கவும் எனக்குத் தெரியாது. உன்னை நான் அறியவில்லை. அத்துடன் உன்னை அறியக்கூடிய புத்தியும் எனக்கில்லை" என்கிறார். பற்றற்று இடைவிடாது அன்புடன் சிவனை வழிபட்டால் இறைவன் அவர்களுக்குப் புத்தி யோகத்தைக் கொடுத்து அதன்மூலம் தன்னை அடையச் செய்வார். இது காலங்காலமாக நடைபெறுகிறது. மகாலிங்கம் கூறும் அறிவுரைகள் உனக்குப் பொருத்தமாக இருப்பதாகக் கூறுகிறாய். அது பொருத்தமாக இருக்கும். ஏனென்றால் அவன் உன்னைப்போல வாழ்ந்தவன். என்னென்ன துன்பம் எப்படித் துன்புறுத்தும் என்று அவன் அறிவான். நீ வர்த்தகன். எப்படி வியாபாரம் செய்ய வேண்டும் என்று தெரிந்தவன். மகாலிங்கம் குடியாலும், பெண்களின் தொடர்பாலும் துன்பப்பட்டவன். அதனால் எப்படி

அதிலிருந்து மீளமுடியும் என்று தெரிந்தவன். அதனால் கூறுகிறான். அதைக்கேட்டு நட முயற்சி எந்தச் செயலையும் வெற்றியடையச் செய்யும். அதனால் சிவனை அடைய முயற்சி செய்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**வழங்குகின்றாய்க்குன் அருளார் அமுதத்தை வாரிக்கொண்டு**

**விழுங்குகின்றேன்விக்கி ன் வினையேன் என் விதியின்மையால்**

**தழங்கருந்தேனன்ன தண்ணீா பருகத்தந் துய்யக் கொள்ளாய்**

**அழுங்குகின்றேன் உடையாய் அடியேன் உன் அடைக்கலமே 10**

“அருணாசலம், சிவன் தன் அருள் அமிர்தத்தை அடியவர்க்கு வேண்டியவாறு அளிக்கிறான். அதை அள்ளி உண்கின்ற நல்வினைப்பயன் அடியார்க்கு இருத்தல் வேண்டும். அந்த நல்வினைப்பயன் இன்மையால் மாணிக்கவாசக சுவாமிகள் தான் துன்பப்படுவதாகக் கூறுகிறார். அவர் நல்வினைப் பயனின்மையால் விக்கி வருந்துகிறாராம். அதற்கு நீரைத்தா என்றும் உருகுகிறார்”

ஒரு செயலை முடிக்கவோ அல்லது இறைவனை வணங்கவோ நாம் புண்ணியம் செய்திருத்தல் வேண்டும். காலம் கனிந்துவர வேண்டும். மகாலிங்கம் எழுபதுவயதுவரை இறைவனை உணரவில்லை. கடவுள் என்பது ஏமாற்று வித்தை. பணம் சம்பாதிக்கும் வழி என்று கூறிக்கொண்டு திரிந்தவன். காலம் வந்தபின் அவனாகவே திருந்தி மெய்யடியராகிவிட்டான். ஆச்சிரமத்திற்கு வரும் கந்தவனம் என்ற அடியவர் பத்து வருடங்களுக்கு முன்பு வீடுகட்ட அத்திவாரமிட்டவர். இன்னும் கட்டி முடியவில்லை. அவரது சகோதரன் மூன்று மாதங்களுக்கு முன்பு ஒரு மாடிவீடு கட்ட அத்திவாரமிட்டவன். கட்டிமுடித்து விட்டான். இதெல்லாம் சிவனின் செயல். ஏன் நடக்கிறது, எப்படி நடக்கிறது என்று அவனுக்குத்தான் தெரியும். இவ்வளவு காலமும் உணராத நீ இப்போது உணர்ந்துள்ளாய். இனியாவது சிவனை அடையமுயல்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

திருச்சிற்றம்பலம்.